# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1709/45 - 2011 ජූනි 08 වැනි බදාදා - 2011.06.08

*1709/45 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாணத்தின் மாகாண சபை

*2011 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2011, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2011, மே மாதம் 10 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச்சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

*கே. டீ. சிறிசேன,*
*மாகாண சபைச் செயலாளர்,*
*ஊவா மாகாணம்.*

*சபை செயலகம்,*
*ஊவா மாகாண சபை,*
*இராஜ வீதி,*
*பதுளை,*
*2011, மே 30.*

**ஊவா மாகாண மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதர நியதிச் சட்டம்**

*ஊவா மாகாணத்தின் கால்நடை வழங்கலை பேணிப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மிருகநோய் கட்டுப்பாடு போன்றவற்றை நோக்கமாக கொண்டு தகுந்த தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, பயனுறுத் தன்மையோடும், வினைத்திறன் மிகுந்தவகையில் நிறைவேற்றுவதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளருக்கு உரித்தாக்கப்படும் அதிகாரங்களையும் அதற்கு இடைநேர் விளையக்கூடிய விடயங்கள் தொடர்பில் ஏற்பாடு செய்வதற்கான நியதிச் சட்டம்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.*

*சுருக்கப்பெயரும் மற்றும் நடைமுறைக்கு வருகின்ற திகதி.*

*1. இந்நியதிச் சட்டத்தை ஊவா மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படும் நியதிச் சட்டம் என்று அறிமுகப்படுத்துவதோடு, அதற்கு ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் நடைமுறைக்கு வரும்.*

*2. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தலைவர் என்ற ரீதியில் 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் 1 ஆவது தரத்தை சேர்ந்த உத்தியோகத்தராக ஊவா மாகாண ஆளுநரால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது. அப்பதவிக்கேற்ப சம்பந்தப்பட்ட நபர் ஊவா மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தலைவராவார் (முக்கியஸ்தராவார்).*

திணைக்கள முக்கியஸ்தரை நியமனம் செய்தலும் அதன் அமைப்பும்.

(2) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான மேலதிகப் பணிப்பாளர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் நியமித்தல் வேண்டும். அவ் உத்தியோகத்தர் குழுவை நியமித்தல், இடமாற்றம் செய்தல் அவர்கள் தொடர்பிலான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இடைநேர் விளையக்கூடிய ஏனைய விடயங்கள் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்கியது.

3. ஊவா மாாணத்தின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயப் பொறுப்பான அமைச்சர் அவர்களுடைய சாதாரண ஏற்பாடுகளுக்கும் விஷேட ஏற்பாடுகளுக்கும் இணங்க அவ் அமைச்சின் செயலாளர் அந் நியதிச் சட்டத்தின் நிர்வாகப் பொறுப்பதிகாரியாவார்.

4. (i) ஊவா மாகாணத்திற்குள் கால்நடை வளங்களை பேணிப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் தகுந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயனுறுத்தன்மையோடும் வினைத்திறன் மிகுந்தவாறும் பயன்படுத்தி மாகாண மக்களுடைய விருத்தியை ஏற்படுத்தல்.

(ii) கால்நடை வளங்கள் தொடர்பான மாதிரித் திட்டங்களை வழி நடாத்துவதன் மூலமாக கால்நடை உற்பத்தி மீதான ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தல்.

(iii) பண்ணைகளின் மிருகங்களுடைய தரத்தை மேம்படுத்துவதற்காக செயற்கை உற்பத்திச் சேவைகளை மேம்படுத்தல்.

(iv) தரமான வர்க்கத்தைச் சேர்ந்த ஆடு, மாடு, பன்றி, கோழிகள் உட்பட ஏனைய மிருகங்களை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுத்தல்.

(v) தரமான புல் வகைகள், மிருக உணவு வகைகள், பயிரிட தேவையான நடுகைப் பொருட்கள், உபகரணங்களை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுத்தல் உட்பட.

(vi) ஊவா மாகாணத்தை சேர்ந்த வேறு நிறுவனங்கள், அமைப்புகள் மூலமாக நடாத்தப்படுகின்ற கால்நடை வளங்களின் அபிவிருத்திக்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல்.

(vii) கால்நடை நிர்வாகம் தொடர்பான சட்ட கட்டளைகள், பிரமாணங்கள் என்பவற்றை மாகாண சபைக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல்.

(viii) கால்நடை உற்பத்திகளை சந்தைப்படுத்தல் பணிகளை மேம்படுத்துவதற்கு உற்பத்தியாளர்களுடைய அமைப்புகளை தாபித்தல், தேவையான வேறு சேவைகளை பெற்றுக்கொடுத்தல் பால் பாவனையை அதிகரிக்கச் செய்தல்.

(ix) கால்நடை உற்பத்தி துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் அவர்களை ஊக்குவிப்பு செய்கின்ற உத்தியோகத்தர்களை பாராட்டுமுகமாக மாகாண மட்டத்திலான போட்டிகளை நடாத்துதல் மற்றும் விருது வழங்கும் விழாக்களை ஏற்பாடு செய்தல்.

(x) காலத்திற்கேற்ப இனங்காணப்படும் தேவைகளின் கீழ் ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளல்.

5. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களும் எழுத்துமூலமான சட்ட எல்லைகளின் கீழ் பணிப்பாளருக்கு உரித்தாகும். தன்னிடம் பொறுப்பளிக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுவதற்கேற்ப பணிப்பாளரினால் மாகாண சபையில் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமாக, பொது அமைப்புகள் மூலமாக அல்லது நபர்களிடம் ஏதேனும் தகவல்களை கோருவதற்கான வாய்ப்பு உள்ளதுடன் சம்பந்தப்பட்ட நபர்களும், தேவையான தகவல்களை பெற்றுக்கொடுப்பதற்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

(2) மாகாணத்தில் விவசாயத் துறைக்குத் தேவையான மிருகங்களை வளர்க்கின்ற ஒவ்வொரு நபருக்கும் சொந்தமான மிருகங்கள் பற்றிய விபரங்களை ஒவ்வொரு ஆண்டிலும் சனவரி 31 ஆந் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு.

(3) ஊவா மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தை தவிர எவரேனும் ஒருவரால், கால்நடை வளங்கள் தொடர்பான அபிவிருத்தி செயற்திட்டங்களை மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுமாயின் அத்தகைய செயற்திட்டங்களுக்காக பணிப்பாளருடைய அனுமதியை எழுத்துமூலமாக பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதிக்கப்பட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அத விடயம் குறித்து பிரதேசத்தைச் சார்ந்த அரசாங்க கால்நடை வைத்தியரிடம் பொறுப்பளிக்க வேண்டும்.

(4) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக நடாத்திச் செல்லப்படும் செயற்திட்டங்களுக்கான அனுமதி பெற்றுக்கொள்ளும் விவகாரத்தை நிராகரிப்பதற்கான அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு.

(5) ஊவா மாகாணத்திற்குள் நடாத்திச் செல்லப்படும் கால்நடை உற்பத்தி அமைப்புகள்/பிரதேச மிருக வைத்திய உத்தியோகத்தர்களுடைய வழிகாட்டலின் மீது, மாவட்ட பணிப்பாளருடைய சிபாரிசு மீது, பணிப்பாளர் மூலமாக பதிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படுகின்ற அமைப்புகளின் பட்டியலை காலத்திற்கேற்றவாறு நடாத்திச் செல்ல வேண்டும்.

(6) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்படுகின்ற அதிகாரங்களின் கீழ் மேலதிக பணிப்பாளர்களுக்கு, மாவட்ட பணிப்பாளருக்கு மிருக வைத்திய உத்தியோகத்தர்களுக்கு, கால்நடைகள் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு அல்லது வேறொரு உத்தியோகத்தர்களிடம் எழுத்து மூலமாக பொறுப்பளித்தல் வேண்டும். அதிகார பகிர்வு.

7. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுபான கௌரவ அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக, மாகாண ஆலோசனை குழு ஒன்றை தாபித்தல் வேண்டும். அவ் ஆலோசனை குழுவை ஊவா மாகாணத்தின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களால் நியமிக்க வேண்டியதோடு கீழ் குறிப்பிடப்படும் வகையில் அமைந்திருத்தல் வேண்டும். மாகாண ஆலோசனைக் குழுவை தாபித்தல்.

(i) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளர்,
(ii) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் அவர்கள்,
(iii) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார மேலதிக பணிப்பாளர் அவர்கள்,
(iv) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார மாவட்ட பணிப்பாளர்கள் இருவர்,
(v) ஊவா மாகாணத்தின் விவசாய பணிப்பாளர்,
(vi) ஊவா மாகாண விவசாய உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் சம்பந்தப்பட்ட துறையின் பிரதிநிதிகள் இருவர்,
(vii) கால்நடை உற்பத்தியாளர்களுடைய சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருவர்,
(viii) மத்திய அமைச்சின் செயலாளருடைய இணக்கம் மீது, தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைகளால் பெயரிடப்படுகின்ற பிரதிநிதியொருவர்,
(ix) மாகாண பால் உற்பத்திகளை கொள்வனவு செய்கின்ற நிறுவனங்களின் பிரதிநிதியொருவர்.

(2) ஊவா மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளர் ஆலோசனை குழுவின் தலைவராக வேண்டியதோடு, ஊவா மாகாண சுகாதார கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் அவர்கள் அக்குழுவின் செயலாளராக பதவியேற்றல் வேண்டும்.

8. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது, ஊவா மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களுக்கு தேவையான ஆலோசனைகள், பிரேரணைகள் என்பவற்றை முன்வைத்தல். ஆலோசனை குழுவின் கடமைகளும், பொறுப்புகளும்.

(2) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார துறையில் அவ்வப்போது ஏற்படும் பல்வேறு சிக்கல்களை நிவர்த்தி செய்துகொள்வதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல், பிரேரணைகளை முன்வைத்தல்.

(3) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார துறைக்கு சொந்தமான விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்கள் அல்லது செயலாளர் அவர்கள் கவனம் செலுத்துகின்ற எந்த ஒரு விடயம் தொடர்பாகவும், ஆலோசனை

குழு ஆலோசனை வழங்க வேண்டுமென்று கருதப்படும் வேறு பல கருத்துக்கள் தொடர்பாக அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

ஆலோசனை குழுவின் அங்கத்துவத்தை இரத்துச்செய்தல்.

9. (1) விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களால் பெயரிடப்படுகின்ற ஆலோசனை குழுவின் ஒரு அங்கத்தவரை அங்கத்துவத்திலிருந்து நீக்குவதற்கான வாய்ப்பு உள்ளதோடு, அமைச்சர் அவர்களிடம் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்த பின்னர் எவரேனும் குழு அங்கத்தவர் ஒருவர் அங்கத்துவத்தை இராஜினாமா செய்திடலாம்.

ஆலோசனை குழுவின் அங்கத்துவத்தை இரத்துச்செய்தல்.

(2) விடயப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் பெயரிடப்படுகின்ற ஆலோசனை குழு அங்கத்தவர் ஒருவரின் ஆரோக்கியமற்ற உடல் நிலை காரணமாக அல்லது இலங்கையிலிருந்து வேறொரு நாட்டிற்கு சென்றதன் காரணமாக தனது பதவியில் கடமைகளை நிறைவேற்ற முடியாத பட்சத்தில், அமைச்சர் அவர்களால் அப்பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தெரிவு செய்தல் வேண்டும்.

(3) ஆலோசனை குழு அங்கத்தவர் ஒருவர் தனது பதவியை வாபஸ் பெற்றால் அல்லது பதவியை விட்டுச் சென்றால் அல்லது சம்பந்தப்பட்ட பதவியைவிட்டு விலக்கினால் தவிர, நியமனம் செய்த நாள் முதல் மூன்று வருடத்திற்கு ஆலோசனை குழுவில் அங்கத்தவராக கடமையாற்றல் வேண்டும். ஏதேனும் ஒரு காரணததினால் அங்கத்துவத்தை இரத்துச் செய்யப்பட்ட ஒருவர் சார்பாக தெரிவு செய்யப்படுகின்ற புதிய அங்கத்தவர் பதவியை விட்டு விலகிச் சென்றவருடைய மூவாண்டு காலத்தில் மிகுதியாகிய கால எல்லைக்குள் மாத்திரம் அங்கத்தவராக கடமையாற்றல் வேண்டும்.

10. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான திணைக்களத்தின் மூலம் வருடாந்தம் தயாரிக்கப்படும் அபிவிருத்தி திட்டத்தின் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை மாகாண சபை வரவு செலவு பட்டியல் மூலமாகவும் குறை நிரப்பு மதிப்பீடு மூலமாகவும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

(2) எழுத்துமூலமான சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க திணைக்கள கடமைகளுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியிலாக ஒவ்வொரு வகைகளிலிருந்து கிடைக்கின்ற வேறு நிதி ஒதுக்கீடுகளையும் சம்பந்தப்படுத்திக்கொள்ள முடியும்.

வருடாந்த அறிக்கை.

11. நிதி ஆண்டு நிறைவின்போது மாகாணத்திற்குள் கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் போன்றவற்றை நடாத்திச் சென்ற முறையில் ஏற்பட்ட சிக்கல்கள் அவற்றை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், கால்நடைகளின் உடல்நிலை பற்றிய உப சட்டங்கள் உள்ளிட்ட வருடாந்த நிர்வாக அறிக்கையொன்றை அவ் ஆண்டு நிறைவு பெற்று, ஆறு மாதங்கள் செல்வதற்கு முன்பு பணிப்பாளரினால் விடயப் பொறுப்பான அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

வருடாந்த நிர்வாக அறிக்கை நிபந்தனை விதிப்பதற்கான அதிகாரம்.

12. (1) இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களின் கீழ் கொண்டு செல்லக்கூடிய விடயமொன்று தொடர்பாகவும், கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்கள் சம்பந்தமாக கால்நடை உற்பத்தி அல்லது விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களால் நிபந்தனை விதிக்கலாம்–

(i) கால்நடை நிர்வாகம் பற்றிய கொள்கைகளை தயாரித்தல்.
(ii) கால்நடை நிர்வாக பணிகளில் ஈடுபடும் மக்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.
(iii) மாகாணத்தின் மிருக பாதுகாப்பு கடமைகளுடன் தொடர்புடைய பிரமாணங்கள்.

(2) இந்நியதிச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு பிரமாணத்தையும், துரித கதியில் மாகாண சபையில் சமர்ப்பித்தல் வேண்டும். மாகாண சபையால் விதிக்கப்பட்ட பிரமானங்களை அங்கீகரிப்பதற்கு அல்லது மாற்றியமைப்பதற்கான வாய்ப்பு உள்ளதோடு, மாற்றியமைப்பது பற்றிய விதி முறைகளை வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும். அவ்வாறு வெளியிடப்படும் நாள் முதல் அல்லது விதிக்கப்படும் நாள் முதல் அவற்றை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(3) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அமைச்சர் அவர்களால் வெளியிடப்படும் பிரமாணமொன்று நடைமுறையில் இருக்கும் தருணத்தில் சம்பந்தப்பட்ட பிரமாணங்களுக்கு அமைவாக அதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாதிப்பின்றி (பாதகமின்றி) மாற்றப்பட்டவைகளாக கருதப்படல் வேண்டும்.

13. இந்நியதிச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முன்னர் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயத்தை நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாக கொண்டு, சொத்துக்களை, அதிகாரங்களை/உடமைகளை அல்லது ஆளணிகளை ஈடுபடுத்தப்பட்டிருந்தால் அல்லது மாதிரிகளை விளம்பரங்கள், அனுமதிப்பத்திரங்கள் அட்டவணைகள் அல்லது அத்தகைய எழுத்துமூல ஆவணமொன்றை பயன்படுத்த வேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பின் அத்தகைய அனைத்தும் இந்நியதிச்சட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் பொறுப்பளிக்கப்பட்ட அல்லது வேறொரு வகையில் கிடைத்த இத்திணைக்களத்திடம் பொறுப்பளிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் உடமைகளாக கருதப்படவேண்டும். சொத்துக்களும் உடமைகளும்.

14. (1) இந்நியதிச் சட்டத்தினால் அல்லது திட்டமிடப்பட்ட ஏதேனும் பிரமாணங்கள் அல்லது ஏற்பாடுகளைத் துண்டித்தல் அல்லது ஏற்பாடுகளுக்கிணங்க செயற்படுதல், கைவிடுதல் என்பன இந்நியதிச் சட்டத்தில் அல்லது திட்டமிடப்பட்ட கட்டளைகளின் கீழ், ஏதேனும் விடயங்களை உரித்தாக்கப்பட்டுள்ள நபருடைய கடமைகளை நிறைவேற்றுவதில் தடை ஏற்படுத்துவதென்பது, எழுத்துமூல சட்ட ஏற்பாடுகளின் கீழ், இந் நியதிச்சட்டத்தின் கீழ் தவறாக கருதப்படும். நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை கைவிடுதல் தொடர்பாக தண்டனைகளை விதித்தல்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ், தவறு செய்கின்ற ஒவ்வொரு நபரும் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஒருவர் முன்பாக நடைபெறுகின்ற வழக்கு விசாரணையொன்றின் ஊடாக குற்றவாளியாக தீர்மானிக்கப்படும் பட்சத்தில் ஆயிரம் ரூபாவிற்கு குறையாத ஐயாயிரம் ரூபாவிற்கு அதிகரிக்காத அபராதம் செலுத்துவதற்கு அல்லது மூன்று மாதங்களுக்கு குறையாத ஓராண்டிற்கு அதிகரிக்காத காலத்திற்கு கைது செய்தல், அபராதம் செலுத்துதல் ஆகிய இரண்டிற்கும் இணங்குதல் வேண்டும்.

15. சொற்கள் தொடர்பாக விளக்கமளித்தல் தேவைப்படும் பட்சத்தில் தவிர இந்நியதிச் சட்டத்தில் "ஆளுநர்" என ஊவா மாகாணத்தின் ஆளுநர் என கருதப்படுவர்.

"அமைச்சர்" என்பது ஊவா மாகாணத்தின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களை குறிக்கின்றது. ஊவா மாகாண மாகாண சபை கலைத்துவிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒரு முறை மாகாண சபை அமர்வு ஒன்றை நடத்தும் வரை இந்நியதிச் சட்டத்தில் அமைச்சர் என குறிப்பிடப்படும் ஒவ்வொரு இடத்திலும் ஊவா மாகாண ஆளுநர் என்ற அர்த்தத்தை வெளிக்கொணரப்படும்.

"மாகாணம்" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பில் 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊவா மாகாண அதிகார பிரதேசத்தை கருதுகின்றது.

"மாகாண சபை" என்பது ஊவா மாகாணத்தின் மாகாண சபை என கருதப்படுகின்றது.

"செயலாளர்" என்பது ஊவா மாகாணத்தின் மாகாண சபை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அவர்கள் என்ற அர்த்தமாகும்.

"கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர்" என இந்நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படுகின்ற அதிகாரியை இப்பெயரால் அறிமுகப்படுத்தப்படுவார்.

"மத்திய அமைச்சின் (மத்திய அரசாங்கத்தின்) செயலாளர்" என மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என கருதப்படுகின்றது.

"ஏனைய உத்தியோகத்தர் ஒருவர்" என்பது ஊவா மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவராக கருதப்படுவர்.

"கால்நடை பாதுகாப்பு விவகாரங்கள்" என்பது அத்துமீறி மிருகங்களை ஏற்றிச் செல்லல், கொல்லத்தகாத மிருகங்களை கொன்றுவிடுதல் போன்ற பணிகளை தவிர்க்கப்படுவது என்பன கால்நடை பாதுகாப்பு விவகாரங்களாகும்.

"செல்லப்பிராணிகள் என வீடுகளில் பராமரிக்கப்படுகின்ற உற்பத்தி செய்யப்படும் நாய்கள், பூனைகள், பறவைகள் ஏனைய விலங்குகளையும் செல்லப்பிராணிகள் என அறிமுகப்படுத்தப்படும்.

"கால்நடை உற்பத்தி அமைப்புகள்" என பால் உற்பத்தி அமைப்புகள் பால் உற்பத்தி சங்கங்கள், உட்பட ஏனைய கால்நடை வளர்ப்பு விவசாய கழகங்களை இவ்வாறு அறிமுகப்படுத்தப்படுகின்றது.

"விவசாயப் பண்ணை" என்பது விவசாயதுறைக்கு தேவையான எந்த ஒரு இடத்தையும் இவ்வாறு கருதப்படுகின்றது.

சொல் அர்த்தம்.

16. இந்நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ் மொழிகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி சொற்கள் அமுலில் இருக்கும்.

6-501/1

---

## ஊவா மாகாணத்தின் மாகாண சபை

*ஊவா மாகாணத்தின் மாகாண சபை 2011 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் விவசாய அபிவிருத்தி நியதிச் சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2011, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2011, மே மாதம் 10 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச்சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

கே. டீ. சிறிசேன,
மாகாண சபை செயலாளர்,
ஊவா மாகாணம்.

சபை செயலகம்,
ஊவா மாகாண சபை,
இராஜ வீதி,
பதுளை,
2011, மே 30.

### 2011 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாணத்தின் விவசாய அபிவிருத்தி நியதிச் சட்டம்

ஊவா மாகாணத்திற்குள் மாகாண ரீதியிலான கடமைகளுக்கான விவசாய வேலைத்திட்டங்களின் மேம்பாடு, கல்வி மற்றும் விவசாய மீளாய்வுகள் (நமோதிஷ்ட ஆராய்ச்சி நிலையங்களை தவிர) ஊடாக ஊவா மாகாணத்தின் விவசாய மக்களுடைய வாழ்க்கை தரத்தை தரப்படுத்தும் நோக்கில் இணைப்பு பணிகளையும், முகாமைத்துவ பணிகளையும் தரமான முறையில் வழி நடாத்திக்கொண்டு, அதற்கு தேவையான வகையில் புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தி விவசாயத் துறையை விருத்தி செய்வதன் மூலம் விவசாய மக்களுடைய வாழ்க்கை தரத்தை மேம்படுத்தல் தொடர்பாகவும், இடைநேர் விளையக்கூடிய விடயங்களுக்கான ஏற்பாடுகளுக்குமான நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டத்தை 2011 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் மாகாண விவசாய அபிவிருத்தி நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதோடு ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் செயற்படும்.

விவசாய திணைக்களம்.

2. இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கங்களை நிறைவேற்றி கொள்வதற்காக மாகாண விவசாய திணைக்களத்தின் கீழ் (இதன் பின்னர் திணைக்களம் என அறிமுகப்படுத்தப்படுகின்ற) தாபிக்கப்படுகின்ற ஊவா மாகாண விவசாய பணிப்பாளர் அப்பெயர் மற்றும் சம்பந்தப்பட்ட கட்டளைகளின் கீழ் ஊவா மாகாண விவசாய திணைக்களத்தின் தலைவராவார்.

மாகாண விவசாய பணிப்பாளர்.

3. இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் முகமாக திணைக்களத்தின் ஏனைய பதவிகளாக விவசாய பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் என இரு பதவிகள் தாபிக்கப்படுவதோடு, திணைக்களத்தின் பதவிகள் மற்றும் ஏனைய பதவிகளுக்காக நியமித்தல் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 32 ஆம் பிரிவு ஏற்பாடுகளோடு தொடர்புடையதாகும்.

4. இந்நியதிச்சட்டத்தில் சாதாரண அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கிணங்க ஊவா மாகாண அமைச்சரவையின் விவசாய விடயப் பொறுப்பான அமைச்சர் அவர்களுடைய (இதன் பின்னர் அமைச்சர் அவர்கள் என அறிமுகப்படுத்தப்படுகின்ற) ஏற்பாடுகளின் கீழ் ஊவா மாகாண விவசாய அமைச்சின் இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பதிகாரியாவார். செயலாளருக்கான அதிகாரங்கள்.

5. இந்நியதிச்சட்டத்தின் கடமைகளுக்காக இரண்டாவது பந்தியின் கீழ் தாபிக்கப்பட்ட பணிப்பாளர் பதவிக்காக இலங்கை விவசாய சேவையின் முதலாம் தர உத்தியோகத்தர் ஒருவரை ஆளுநர் அவர்களால் நியமனம் செய்தல் வேண்டும். விவசாய பணிப்பாளர் அவர்களை நியமனம் செய்தல்.

6. ஊவா மாகாணத்தின் விவசாய ஏற்பாடுகள், விவசாயத் துறை சார்ந்த கல்வி, ஆராய்ச்சி பணிகள் மாத்திரமின்றி கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தப்படும் புதிய விவசாய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி, மேற்கொள்ளப்படுகின்ற பிரசார பணிகள் மூலமாக மாகாணத்தின் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகவும், விவசாய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் தேவையான வேலைத் திட்டங்களை ஏற்பாடு செய்தல், அவற்றை வழிநடாத்துதல் என்பன இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களாகும். நோக்கங்கள்.

(1)(அ) பாரம்பரிய உள்நாட்டு பயிர்செய்கைகளுக்கு மாத்திரமின்றி புதிதாக அறிமுகபப்டுத்தப்பட்டுள்ள, அறிமுகப்படுத்தப்படும், பயிர் செய்கைகளுக்கு உகந்த இடங்களை இனங்காணல், சம்பந்தப்பட்ட பயிர்ச்செய்கைகளை பிரபல்யப்படுத்துவதற்காகவும், குறிக்கப்பட்ட துறைசார்ந்த நாடளாவிய வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தல். விவசாய துறையை பரவலாக்கல் மற்றும் மேம்பாடு.

(ஆ) புதிய பொருளாதார பயிர் செய்கைகளின் பயனுறுத் தன்மையை அதிகரிக்கச் செய்வதற்கு தேவையான அணுகு முறைகளை உபயோகித்துக் கொண்டு, முன்மாதிரியான பயிர்செய்கைகளை மாகாணத்திற்குள் நடைமுறைபடுத்துவதனூடாக அவ் அணுகுமுறைகளை அடைவதன் ஊடாக விவசாய மக்கள், விவசாய குடும்பங்களின் வருமான வழிகளை மேம்படுத்தல்.

(இ) தேசிய விவசாய உற்பத்தியில் ஊவாவிற்கான கொடுப்பனவுகளை இனங்கண்டு அவ் உற்பத்தி கொள்வனவை அடிப்படையாக கொண்ட நாடளாவிய வேலைத்திட்டங்களை நீண்ட காலமாக திடமான முறையிலும் நடைமுறைபடுத்தல்.

(உ) சிறிய விவசாய குழுக்களை அமைப்பதன் ஊடாக நாடளாவிய விவசாய கடமைகளை முறைப்படுத்தல்.

(ஊ) விவசாயத்திற்கு தேவையான சூழல், பயிர்கள், போகங்களுக்கான உற்பத்தி, குறிக்கோள்கள் தொடர்பான தகவல்கள் உள்ளிட்ட கணனி மயமான தொகுதியொன்றை தாபித்தல், காலத்தின் மாற்றங்களுக்கேற்ப நடைமுறைப்படுத்தல்.

(2) (அ) விவசாயத துறையின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து அறிமுகப்படுத்தப்படுகின்ற, புதிய தொழில்நுட்ப விதிமுறைகளை மாகாணத்திற்குள் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தல் மூலமாக அவற்றைப் பற்றி விவசாயிகள் புரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு அளிப்பதன் மூலமாக அவற்றின் ஊடாக கிடைக்கின்ற பிரதி பலன்களை பற்றி அறிவுறுத்துவதற்கு வழிவகுத்தல். விவசாய ஆராய்ச்சி செயற்திட்டங்கள்.

(ஆ) பெரும் பற்றாக்குறை நிலவுகின்ற பொருளாதார ரீதியில் அதிக இலாபம் கிடைக்ககூடிய புதிய பயிர் வகைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பான பரவலான வேலைத்திட்டங்களுக்காக திணைக்களங்களை அண்மித்த நிகழ்ச்சிகளுக்கு முதலிடம் வழங்குதல்.

(இ) இரசாயன பசளை வகைகளை பயன்படுத்தல், கிருமிநாசினிகளை பயன்படுத்தல் போன்றவற்றை முறைப்படுத்துவது போலவே, இரசாயன மூலமான பசளை மற்றும் உள்நாட்டு கிருமி நாசினி வகைகளை பயன்படுத்துவதை பிரபல்யப்படுத்தல்.

(ஈ) புதிய வகைகள் மற்றும் ஒவ்வொரு இனங்களுக்குரிய தரமான வித்து வகைகள், நடுகை பொருட்கள், உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்து பகிர்ந்தளித்தல் போன்ற சேவை வசதிகளை மேம்படுத்தல்.

(உ) பயிர்செய்கை வகைகளாக (Block) பயிர் செய்கைத் துறைகளை தாபித்தல்.

(ஊ) கிளைமூலமான உற்பத்தி போன்ற புதிய தொழில்நுட்ப முறைகள் மூலமான வளர்க்கப்பட்ட கடமைகளை இலகுவாக மேற்கொள்வதற்கான வாய்ப்பை விவசாய மக்களுக்கு பெற்றுக்கொடுத்தல்.

(இ) விவசாயத்துறையை அடிப்படையாகக்கொண்ட வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தல், அவ் உற்பத்திகளை சந்தைப்படுத்தல்.

(ஈ) வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கு ஏற்ப, தேனீக்கள் வளர்ப்பு, பூக்கள் வளர்ப்பு என்பவற்றுக்கு முதலிடம் கொடுத்தல்.

(எ) தரமான விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு உதவி செய்தல்.

(ஏ) அனுசரணை மூலமான பங்களிப்பை பெற்றுக்கொடுக்கின்ற விவசாய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

பணிப்பாளருக்கு சொந்தமான அதிகாரங்கள்.

7. இந்நியதிச் சட்டத்தின் நோக்கமாக கொண்டுள்ள, கீழ்க் குறிப்பிடப்படுகின்ற அதிகாரங்கள் பணிப்பாளருக்கு உரித்தானவைகளாகும்:-

ஒட்டுத்தாவரம்.

(1) விவசாய அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்ற ஒதுக்கீடுகளை திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக வினைத்திறன் மிக்க வகையிலும் தரமான மீளாய்வுடனும் விவசாய மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையில் ஒதுக்கீடு செய்தல்.

(2) உள்நாட்டு ரீதியிலாக ஆகக்கூடிய பயன் கிடைக்கக் கூடிய வகையில், மாகாணத்திற்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக விவசாய பொருளாதாரதுறையை மேம்படுத்தல்.

(3) அரசாங்கத்தின் கொள்கைகள், மாகாண சபையின் கொள்கைகள் என்பவற்றை அடிப்படையாக கொண்ட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக, மாகாணத்தின் விவசாய உற்பத்திகளையும், விவசாயிகளுடைய பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதன் ஊடாக நாட்டின் உற்பத்திக்கு அதிக பங்களிப்பை பெற்றுக்கொடுத்தல்.

(4) பல்வேறு நிறுவனங்கள் மூலமாக உத்தேச விவசாய வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்து அவற்றை மாகாணத்திற்கு பொருத்தமான வகையில் செயற்படுத்துவதற்கான அனுமதி வழங்குதல்.

(5) விவசாய உற்பத்திகளில் விவசாயத்துறையை அடிப்படையாக கொண்ட வேலைத்திட்டங்களை உருவாக்கல், உற்பத்திகளை சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்காக பதிவு செய்யப்பட்ட அதிகாரியாக செயற்படுத்தல்.

(6) மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சிறிய விவசாய கழகங்களையும், இளம் விவசாய குடும்பங்களையும் பதிவு செய்தல்.

(7) பெருமளவில் விரையமாகும் விவசாய உற்பத்திகளின் அளவை குறைப்பதற்காக பின் அறுவடை தொழில்நுட்ப கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய அதிகாரியாக செயற்படுத்தல்.

(8) மாகாணத்திற்கு கொண்டு வரப்படுகின்ற பல்வேறுபட்ட வித்து உற்பத்தி பொருட்களை உரிய வகையில் நிர்வகிப்பதற்கு தேவையான அணுகு முறைகள் பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரியாக செயற்படுத்தல்.

(9) விவசாய கடமைகளுக்காக அரச நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் கடனை கட்டாயமாக விவசாய கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படுகிறது என சிபாரிசு செய்வதன் மூலம், ஒழுங்கான முறையில் விவசாய கடமைகளுக்குத் தேவையான கடனை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல்.

(10) விவசாய உற்பத்தி பணிகளில் ஏற்படும் தடைகளை நீக்குவதற்கு தேவையான சட்ட கட்டளைகளை திட்டமிடுவதற்காக பங்களிப்பு செய்தல், மற்றும் பிரமாணங்களை நடைமுறைபடுத்துவதற்கான அதிகாரியாக செயற்படுதல்.

*8.* இந்நியதிச்சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான தகவல்களை சேகரிக்கும் முகமாக - தகவல் தொகுதியொன்றை தாபித்தல், மற்றும் காலத்திற்கு ஏற்ற வகையில் பணிப்பாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியால் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். தகவல் தொகுதியொன்றை தாபித்தல் மற்றும் காலத்திற்கேற்ற நடவடிக்கைகள்.

*9.* இந்த நோக்கங்களை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற விடயத்தில் தேர்ச்சி பற்றி ஆராய்வதற்காக, திட்டமிட்டவாறு தேர்ச்சி பற்றிய கலந்துரையாடல் கூட்டங்களை நடாத்துதல், தேர்ச்சி அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல், எதிர்பார்த்த தேரச்சியை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தடைகளை இனங்காணல், அவற்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற பணிகளில் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்ப்பட்ட உத்தியோகத்தரின் பொறுப்பாகும். தேர்ச்சி கலந்துரையாடல் கூட்டங்களும் பின் ஆராய்வுகளும்.

*10.* இந்நியதிச்சட்டத்தினால் விதிக்கப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் முகமாக பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் தேவையான தகவல்களை கோருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் அத்தகவல்களை வழங்க வேண்டியதோடு, கோரப்படுகின்ற தகவல்களை பெற்று கொடுப்பதற்கு தயங்கும் அல்லது அவற்றை நிராகரிக்கின்ற நபரை குற்றவாளியாகக் கருதி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தகவல்களை பெற்றுக்கொள்ளல்.

*11.* இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் முகமாக அனைத்து ஏற்பாடுகளும் எழுத்து மூலமான சட்ட ஏற்பாடுகளுக்க ஒத்திசைவாதல். எழுத்து மூலமாக சட்டத்திற்கு ஒத்திசைவானது.

*12.* இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை சாதிக்கும் முகமாக பணிப்பாளரிடம் பொறுப்பளிக்கப்படுகின்ற அதிகாரங்களை தேவையான வகையில் அவ்வப்போது பிரதி விவசாய பணிப்பாளர்கள், உதவி விவசாய பணிப்பாளர்கள் உதவி விவசாய ஆலோசகர்கள் மற்றும் விவசாயத் திணைக்களத்தின்கீழ் சேவையாற்றும் உத்தியோகத்தரிடம் அல்லது வேறொரு உத்தியோகத்தர் எழுத்துமூலமாக பொறுப்பளிக்க வேண்டும். அதிகாரப் பகிர்வு.

*13.* (i) மாவட்ட செயலாளர் அவர்கள் மாவட்டத்திற்குள் அமைந்துள்ள விவசாய தலைமை வகிப்பதோடு, பிரதி விவசாய பணிப்பாளர் மாவட்ட விவசாய குழு செயலாளராவார். மாவட்ட விவசாய குழுவின் அமைப்பும் கடமைகளும்.

(ii) மாவட்டச் செயலாளருடைய தலைமையில் இடம்பெறும். மாவட்ட விவசாய குழுவில் மாவட்ட விவசாயத் துறைசார்ந்தவாறு சேவையாற்றும் அனைவரும் கலந்துக்கொள்ளல் வேண்டும்.

(iii) மாவட்ட விவசாய குழுவினால், மாவட்ட விவசாய அபிவிருத்தி பற்றிய விடயங்களை கலந்துரையாடுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்குதல் விவசாயத் துறையோடு தொடர்புடைய நிறுவனங்களுக்கிடையில் தொடர்புகளை வைத்துக்கொள்ளல், பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வயல் காணிகளில் பயிர்செய்வது தொடர்பில் தீர்மானித்தல், விசேட செயற்றிட்டங்கள் பற்றி கலந்துரையாடல், அங்கீகரித்தல், புதிய செயற்றிட்டங்களை திட்டமிடுதல், விவசாய துறையின் தேர்ச்சியை பற்றி ஆராய்தல் போன்ற பணிகள் என்பன இடம்பெறும்.

*14.* பிரதேச விவசாய குழுவின் தலைவராக பிரதேச செயலாளர் அவர்கள் கடமையாற்றுவதோடு, அப்பிரதேச செயலாளர் பிரிவில் சேவையாற்றும், சிரேஷ்ட விவசாய ஆலோசகர், பிரதேச விவசாய குழுவின் செயலாளராக பதவியேற்க வேண்டும்:- பிரதேச விவசாய குழுவின் அமைப்பும் கடமைகளும்.

(i) பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெறும் பிரதேச விவசாய குழு கூட்டத்திற்காக பிரதேச வாரியாக விவசாய துறையுடன் தொடர்பு கொண்டுள்ள நிறுவன தலைவர்கள் கட்டாயமாக பங்குபற்றல் வேண்டும்.

(ii) பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுவதற்கும், நடைமுறைப்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்குதல், மாவட்ட விவசாய குழு மேற்கொண்ட தீர்மானங்களை பிரிவு வாரியாக செயற்படுத்துவதற்கு உதவுதல், விவசாயத் துறையோடு தொடர்புள்ள நிறுவனங்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளல், இணைப்பு பணிகளை மேற்கொள்ளல், திட்டங்களை திட்டமிடுவதில் ஒத்துழைப்பு வழங்கல் என்பன பிரதேச விவசாய குழுவின் கடமைகளாகும்.

ஆலோசனை குழுவொன்றை தாபித்தல்.

15. அமைச்சர் அவர்களால் கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் ஆலோசனை குழு ஒன்றை தாபித்தல்:-

(1) ஆலோசனை குழுவிற்கென உத்தியோகபூர்வமாக கீழ் குறிப்பிடப்படுகின்ற குழு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர் :-
- (அ) விவசாய அமைச்சின் செயலாளர்;
- (ஆ) விவசாய பணிப்பாளர்;
- (இ) பதுளை, மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதி விவசாய பணிப்பாளர்கள்;
- (ஈ) மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர்;
- (உ) மத்திய அமைச்சின் செயலாளருடைய ஒத்துழைப்புடன் பதுளை, மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களினதும் கமநல சேவை உத்தியோகத்தர்கள்.

(2) நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் (இதனை தொடர்ந்து நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் என அறிமுகப்படுத்துகின்ற) அமைச்சர் அவர்களால் பெயரிடப்பட்ட விவசாய கழகங்களின் உத்தியோகத்தர்கள் நால்வர் ஆவர்.

(3) விவசாய அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வமாக ஆலோசனை குழுவின் தலைவராவதோடு செயலாளராக பணிப்பாளர் கடமையாற்றுவார்.

ஆலோசனை குழுவின் பொறுப்புகள்.

16. (1) (அ) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் முகமாக விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களிடம் பிரேரணை சமர்ப்பித்தல்.

(ஆ) விவசாய துறைக்கு சொந்தமான எந்த ஒரு விடயத்திற்காகவும் விவசாய அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

விதிமுறைகளை தயாரித்தல்.

17. ஆலோசனை குழுவை நடைமுறைப்படுத்த வேண்டிய முறை தொடர்பாகவும், அத்துடன் தொடர்புடைய எந்தவொரு விடயத்திற்காகவும் தேவையான விதிகளை தயாரிக்க வேண்டியது அமைச்சின் பொறுப்பு.

அங்கத்துவத்தை இரத்துச் செய்தல்.

18. (1) அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களின் அங்கத்துவத்தை இரத்துச் செய்வது தொடர்பான ஏற்பாடுகளை கௌரவ அமைச்சர் அவர்களால் மேற்கொள்ளவேண்டும். அத்தகைய அங்கத்தவர் ஒருவர் தனது இராஜினாமாவை எழுத்துமூலமாக அமைச்சர் அவர்களிடம் பொறுப்பளித்த பின் தனது அங்கத்துவம் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

(2) குழுவின் வேறொரு அங்கத்தவர் சீரற்ற உடல் நிலை காரணமாக அல்லது இலங்கையை விட்டு வெளியேறியதன் காரணமாக அல்லது வேறு விடயங்கள் காரணமாக குழுவின் கடமைகளை நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களில் குழு கடமைகளை நிறைவேற்றும் நோக்கில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வேறு உத்தியோகத்தர் ஒருவரை தெரிவ செய்தல் வேண்டும்.

பதவிக்காலம்.

19. குழு அங்கத்தவர் ஒருவர் தனது அங்கத்துவத்தை வாபஸ் பெற்றுக்கொண்டால் அல்லது அங்கத்துவத்தை விட்டுச் சென்றால் அல்லது அங்கத்துவத்தை இரத்துச் செய்யப்பட்டால் தவிர நியமனம் செய்த நாள் முதல் 3 ஆண்டுகளாக இப்பதவி அங்கம் வகித்தல் வேண்டும்.

பிரதேச ஆலோசனை குழுவின் அமைப்பு.

20. மாகாணத்தை சேர்ந்த ஏதேனும் பிரதேச செயலாளர் பிரிவு ஒன்றில் நடைமுறையில் உள்ள வலய ரீதியிலான விவசாய பணிகள் தொடர்பில் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கென பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக கீழ் குறிப்பிடப்படும் அமைப்பிற்கு இணங்க அமைச்சர் அவர்களால் ஆலோசனை குழுவொன்றை தெரிவு செய்தல் வேண்டும்.

21. அப்பிரதேச ஆலோசனை குழுவின் அமைப்பு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைந்திருக்க வேண்டும்.

(1) (அ) பிரதேச செயலாளர்.
- (ஆ) சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தின் பிரதேச சபை தலைவர் ஒருவர்.
- (இ) தொகுதியை சேர்ந்த அனைத்து கமநல சேவைகள் குழுக்களிலும் தலைவர்கள்.

(ஈ) தொகுதியை சேர்ந்த அனைத்து கமநல சேவைகள் பிரதேச உத்தியோகத்தர்கள்.
(உ) தொகுதியை சேர்ந்த விவசாய ஆலோசகர்கள்.
(ஊ) தொகுதியை சேர்ந்த கமநல சேவைகள் அதிகார பிரதேசங்களில் ஒரு கிராம சேவை உத்தியோகத்தர்கள்.

(2) பிரதேச செயலாளர் அவர்கள் அப்பிரதேச ஆலோசனை குழுவின் தலைவராவார்.

(3) அக்குழுவின் சிரேஷ்ட விவசாய ஆலோசகர் அங்கு செயலாளராக பதவி வகித்தல் வேண்டும். விவசாய பணிப்பாளர் அல்லது அவரால் அனுமதி வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களை பிரதேச ஆலோசனை குழு கவனம் செலுத்துகின்ற அனைத்து விடயங்கள் மீதும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

பிரதேச ஆலோசனைக் குழுவின் கடமைகள்.

22. (1) விவசாய துறைக்கு விவசாய அபிவிருத்திக்கு ஏற்றவாறு பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குதல் அல்லது சிக்கல்கரமான சந்தர்ப்பங்களில் தேவையான ஆலோசனை வழங்குதல்.

(2) ஆலோசனை வழங்குவது தொடர்பாக அறிக்கையிடுதல், தேவையான தகவல்களை சேகரித்தல் மற்றும் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளல்.

நிபந்தனை விதிப்பது தொடர்பான அமைச்சர் அவர்களது அதிகாரம்.

23. இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களை அடிப்படையாக கொண்ட ஏதேனும் ஒரு விடயம் சம்பந்தமாக கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்கள் பற்றி அமைச்சர் அவர்கள் நிபந்தனை விதித்தல் வேண்டும்:-

(1) விவசாயத் துறைக்கு சொந்தமான கொள்கைகளை தயாரித்தல்.
(2) விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு சலுவை வழங்குதல்.

24. அமைச்சர் அவர்களால் விதிக்கப்படும் நிபந்தனைகளை துரித கதியில் மாகாண சபையில் சமர்ப்பித்தல் வேண்டும். மாகாண சபையால் சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை அனுமதித்தல் அல்லது மாற்றம் செய்வது தொடர்பாக அமைச்சர் அவர்களால் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட வேண்டும்.

25. அமைச்சர் அவர்களால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் அமுல்படுத்துகையில் மாகாண சபையால் அதனை மாற்றம் செய்தால், அவ்வாறு மாற்றம் செய்யும் போது அக்கட்டளைகளின் கீழ் அது வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு பங்கம் ஏற்படாத வகையில் கட்டளையை மாற்றப்பட்டதாக கருத வேண்டும்.

பொருள் கோடல்.

26. சொற்கள் தொடர்பில் வேறு விளக்கமொன்று தேவைப்படுமாயின் தவிர இந்நியதிச் சட்டத்தின் "அமைச்சர்" என ஊவா மாகாண விடயப்பொறுப்பான அமைச்சர் அவர்கள் என்று அறிமுகப்படுத்தப்படுகின்றது.

"மாகாண சபையை கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில்" என ஊவா மாகாண ஆளுநர் அவர்களை கருதப்படும்.

"பிரதேச செயலாளர்" என பிரதேச செயலாளர் பிரிவுகளின் நிர்வாக அதிகாரிகள் கருதப்படுவர்.

"ஏனைய உத்தியோகத்தர்" என்பது விவசாய திணைக்களத்தின் கீழான கடமைகளை நிறைவேற்றும் முகமாக கடமைகள் பொறுப்பளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்.

மொழிப் பிரயோகம்.

27. இந்நியதிச்சட்டத்தில் சிங்களம், தமிழ் சொற்களுக்கிடையில் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி சொற்கள் அமுலில் இருக்கும்.

6-501/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.